பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 06 2026** **06 45**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக கடந்த **12** ஆண்டுகளில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

**3.** மாநிலத்தின் மின்துறை செயல்பாடுகள் குறித்த வெள்ளை அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு, பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**5.** உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா **64** ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

<<<<>>>>

விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக கடந்த 12 ஆண்டுகளில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் எழுதியுள்ள கட்டுரையைப் பகிர்ந்து கொண்டுள்ள அவர், விவசாயிகளுக்கான மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் அவர்களது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வேளாண் துறையின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து, மத்திய அமைச்சரின் கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் அறிவியல், தொழில்நுட்பத் துறையின் வளச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்க்குள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தூய்மை இந்தியா, டிஜிட்டல் இந்தியா, டிஜிட்டல் சுகாதாரம், ஆழ்கடல் இயக்கம், ககன்யான் போன்ற திட்டங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருவதை சுட்டிக்காட்டினார்.

உலக அரங்கில், விண்வெளி, அணுமின்சக்தி, போன்ற நவீன தொழில்நுட்பங்களில், இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக அவர் கூறினார்.

அரசின் முன்முயற்சிகள் உள்நாட்டுத் தொழில்நுட்பத் திறன் மேம்பட்டுள்ளதாகவும், தொழில்நுட்பத் துறையில் இந்தியா மீது உலக உலக நாடுகள் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மாநிலத்தின் மின்துறை செயல்பாடுகள் குறித்த வெள்ளை அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரை தமுக்கம் மைதானத்தில் அரசு பொருட்காட்சியைத் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு 72 லட்ச ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடன் பேசிய அவர், மின்துறையில் அரசிற்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் இந்த வெள்ளை அறிக்கையில் இடம்பெறும் என்று கூறினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி தொடர்பான திட்டங்களில் முறைகேடுகள் காரணமாக, காற்றாலை மற்றும் சூரிய மின்சக்தி உற்பத்தியில் தமிழகம் பின்தங்கியுள்ளதாக அவர் குறை கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன், அரசுப் பொருட்காட்சியில் மாநில அரசின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளில் அரசின் திட்டங்கள் குறித்து மக்கள் அறிந்துகொண்டு பயனடைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

விஸ்-ஹா ஏர்நெட்-**14**

<<<<>>>>

விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு தெரிவித்துள்ளார்.

மரக்காணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அப்பகுதி மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்ட பின் பேசிய அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான உள்கட்டமைப்பு வசதிகள் தொடரபான கோரிக்கைகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்று திரு. வன்னி அரசு கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், நாகை துறைமுகத்தில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க புறப்பட்டுச் சென்றனர்.

இந்திய கடற்பகுதியில் பாதுகாப்பாக மீன்பிடிக்க ஏதுவாக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாகை மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - 1 — Selvan Jebaraj — 31 Sec)**

61 நாட்கள் தடைக்காலத்திற்குப் பிறகு மீன்பிடிக்கச் செல்வது தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் உற்சாகத்துடன் கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - 2 — Lakshmanan — 29 Sec)**

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில், நாள்தோறும் 7 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு பல்வேறு மாட்டங்களுக்கு அனுப்பி வைப்பதுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், பல்வேறு காரணங்களால், முட்டை விலை கடந்த இரு வாரங்களாக அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - நாமக்கல் கண்ணன் ---- 32 செகண்ட்ஸ்)

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசிலப் பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு, பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாமக்கல், சேலம், திருச்சி, உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில், ஒருசியா இடங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில், வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

தமிழகக் கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, மற்றும் குமரிக்கடல் பகுதிகளில், பலத்த சூறைக்காற்று வீசக்கூடும் என்பதால், அடுத்த நான்கு நாட்களுக்கு இப்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ரஷ்யாவின் எண்ணெய்க் கிடங்குகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக யுக்ரைன் அதிபர் திரு வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

-------------

லெபனான் தலைநகர் பெயிரூட்டில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதக்குழு கட்டமைப்புக்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

-------------

ஆங்கிலக் கால்வாயில், ரஷ்யாவின் கடற்படைக்குச் சொந்தமான தடைசெய்யப்பட்ட ஸ்மிர்டோஸ் என்ற எண்ணெய் கப்பலை நேற்று பிரிட்டிஷ் ஆயுதப் படை தடுத்து நிறுத்தியது.

-------------

எந்திரக்கோளாறு காரணமாக ஓமன் கடற்பகுதியில் சிக்கித்தவித்து வந்த கப்பலில் இருந்த 14 இந்திய மாலுமிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

-------------

இம்மாதம் 21-ம் நடைபெறவுள்ள நீட் மறுநுழைவுத் தேர்விற்கான நுழைவுச் சீட்டை அதன் அதிகாரப்பூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

-------------

எய்ம்ஸ் மருத்துவமனையுடன், தொலைத்தொடர்புத் துறை இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம், புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் அடித்துச் செல்லப்பட்ட மூதாட்டி

ஒருவரை அம்மாவட்டத் தீயணைப்புத் துறையினர் பத்திரமாக மீட்டனர்.

-------------

நாகை மாவட்டம் திருக்குவளை அருகே எட்டுக்குடியில் அமைந்துள்ள ஸ்ரீசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் வைகாசி திருவிழா, வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது.

-------------

மதுரை சர்வதேச விமான நிலையத்தில், விமானப் பயணிகளின் பயண அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

-------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில், மத்திய அரசின் **Fit India** அமைப்பின் மூலம் நடத்தப்பட்ட சிலம்பம், கராத்தே உள்ளிட்ட போட்டிகளில் கலந்து கொண்ட பள்ளி மாணவர்களுக்கு நேற்று பாராட்டு விழா நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் டிவென்டி -டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா **64** ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

பர்மிங்ஹாமில் நேற்று நடைபெற்ற போட்டியில், முதலில் ஆடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **6** விக்கெட் இழப்பிற்கு **170** ரன் எடுத்தது.

இதனையடுத்து **171** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் **17** ஓவரில் **106** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

**<<<<The End>>>>**